20.09.2024

OS.No.200/2022

PW1 – பரமசிவன், த/பெ.ராமையா

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 20.09.2024.

<u>குறுக்கு விசாரணை :</u> ( பிரதிவாதி தரப்பில்)

1. என் தாய், தந்தை கிரையம் பெற்ற இடத்தை நான் அனுபவம் செய்துவந்தேன். அதில் நான் வேலி போட்டு பராமரித்து வந்தேன்.

2. அந்த இடத்தில் வீடுகட்ட முயற்சித்த போது பிரதிவாதிகள் அவர்களது இடம் என தொந்தரவு செய்து, வேலிகளை உடைத்து நஷ்டமாக்கியதால் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

3. என் அப்பா, பிராது தபசில் சொத்தை 1967ல் செய்யது சுலைமான் சாகிப்– பிடம் இருந்து கிரையம் பெற்றார்.

4. வா.சா.ஆ.2 ஆவணத்தின் அசல் ஆவணம் என்னிடம்தான் உள்ளது.

5. வா.சா.ஆ.2–ன் அசல் நான் தாக்கல் செய்தால் இவ்வழக்கிற்கு விரோதமாக இருக்கும் என்பதால் அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் நான் வேண்டுமென்றே தாக்கல் செய்யவில்லை என்றும், வா.சா.ஆ.2 அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்பதால் இவ்வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

6. என் அப்பா, மொத்தம் 18 ½ செண்ட் இடம் செய்யதுசுலைமான் சாகிப்பிடம் கிரையம் பெற்றார். சர்வே எண்.187/4 ஏ 2 பி–யில் 5 செண்டும், சர்வே எண்.187/24 பி2 பி–ல் 10 செண்டும், சர்வே எண்.188 ல் 3 ½ செண்ட் ஆக மொத்தம் 18 ½ செண்ட் ஆகும்.

7. என் அப்பா கிரையம் பெற்ற ஆவணத்தில் சர்வே எண்.188 யை பொறுத்து துலங்குமா என்றால் என்னால் கண்ணாடி அணியாததால் என்னால் குறிப்பாக சொல்ல இயலவில்லை. வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தில் சர்வே எண்.188 யை பொறுத்து என் அப்பா கிரையம் பெறவில்லை என்றும், நான் வழக்கிற்காக சர்வே எண்.188 உள்ளதாக தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

8. என் அப்பா 1975 ம் ஆண்டு இறந்துவிட்டார். என் அப்பா இறந்த விவரத்தை பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

9. என் அப்பா தபசில் சொத்தை பொறுத்து எந்த ஆவணமும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டார்.

10. என் அப்பா, செய்யதுசுலைமான் சாகிப்பிடம் பெற்ற சொத்தை பொறுத்து உரிமை கோரமுடியும் மற்ற சொத்தை பொறுத்து உரிமை கோரமுடியாது என்றால் சரியல்ல.

11. கடந்த 2014 ம் வருடம் என் அம்மா, என் அக்கா ஆகியோர் எனக்கு விடுதலை கொடுத்த வகையில் வா.சா.ஆ.3 ன்படி தபசில் சொத்து எனக்கு பாத்தியமானது.

12. வா.சா.ஆ.2 ன் சர்வே எண்.188 யை பொறுத்து கிரையம் இல்லாதபோது அதன் அடிப்படையில் ஏற்பட்ட வா.சா.ஆ 3 ஆவணத்தில் சர்வே எண்.188 சேர்த்துள்ளதால் சர்வே எண்.188, வா.சா.ஆ.3 பொறுத்து செல்லாது என்றால் சரியல்ல.

13. சர்வே எண்.188 யை பொறுத்து என் அப்பாவிற்கோ, செய்யது சுலைமானுக்கோ பாத்தியம் என கூறுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் என் அப்பா பெற்ற கிரையப்பத்திரத்தை தவிர வேறு ஆவணம் இல்லை.

14. பிரதிவாதிகள் மீது 2022 ம் வருடம் குற்றாலம் காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன். போலீசார் உரிமையியல் வழக்கு என்பதால் நீதிமன்றத்தில் நிவாரணம் தேடிக் கொள்ள சொன்னார்கள். நான் வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றும், நான் போலீசார் விசாரணையில் ஆஜராகவில்லை என்றால் சரியல்ல.

15. சர்வே எண்.188 ஆனது பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட இடம் என்றும், நான்தான் சர்வே எண்.188 ல் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்ததால் பிரதிவாதிகள் தடை செய்துள்ளார்கள் என்றும், உரிமையில்லாத சொத்துக்கு நான் தடையாணை கோரமுடியாது என்றால் சரியல்ல.

16. என் வழக்கு தள்ளுபடியாக வேண்டும்என்றால் சரியல்ல.

17. 1,3 பிரதிவாதிகள் என் அப்பாவின் சகோதரர் மகன் ஆவார்.

18. 1ம்பிரதிவாதியின் மகன் 2ம்பிரதிவாதி. 3ம் பிரதிவாதியின் மகன் 4,5 பிரதிவாதி.

19. மறுவிசாரணை இல்லை.

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.